8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

210. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் பிரிவு 10 (1)-ன் கிழ், பழவேற்காட்டினை உள்ளூர் அமைப்புப் பகுதியாக அறிவிப்பது குறித்து, வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சி துறையின் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 ஆம் தேதியிடப்பெற்ற 1855 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்). [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)].

211. தமிழ்நாடு நகர-நாட்டுப்புற அமைப்பு-வளர்ச்சி நிதி விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8 ஆம் தேதியிடப்பெற்ற 35 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்). [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

212. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, உள்துறையின் (திரைப்படங்கள்) 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் தேதியிடப்பெற்ற 2907 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [(தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப் பட (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

—எதுவுமில்லை—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS